INDIAN JOURNAL OF TAMIL | Volume 1 | Issue 4

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# சிலம்பில் அறியபடாத மலர் வகைகள்

**இ. இந்துராணி** [அ]

[அ] தமிழ்த்துறை, பிரிஸ்ட் நிகர்நிலைப் பல்கலைக்கழகம், மதுரை-613403, தமிழ்நாடு, இந்தியா.

# Unrevealed flower types of Silambu

**E. Indhurani** [a,*]

[a] Department of Tamil, Prist Deemed University, Tamil Nadu, India.
*Corresponding Author Email: indhurani42@gmail.com

(Received: 05th October 2020; Accepted: 10th November 2020)
DOI: http://doi.org/10.34256/ijot2043

**Abstract:** When we look at Flower, it is natural to remember first. Kapilar is the poet of the nature. The poet himself was the first to be a poet in the style of the poet, and the study of the 99 types of flowers of Kurinjipattu is made. The three katai of The Silapathikaram contain 30 ears. Do the akkadai contain 99 types of flowers of Kurinjipatti, are there flowers that are not present, and are there any new flowers in silambu, This paper is designed to be a subject of the purpose of the study. Since it is a study of flowers, I have put the title unrevealed Varieties of Flowers in Silambu. This article is based on the study of the unknown flowers that are found in Kurinji.

**Key Words:** Silapathikaram, Flowers, Kurinji, Kurinjipattu, Nature

## முன்னுரை

அறிஞர்களும் பல சான்றோர்களும். அவ்வாறான உலகில் இலக்கியமானது மனிதனின் அறிவு உலகத்தினைப் பெரிதாக்குகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இன்று இலக்கியத்திலோ இலக்கணத்திலோ பல ஆய்வுகளை மேற்கொண்டாலும் என்றும் அள்ளள்ளக்குறையாத அட்சயப்பாத்திரமாகத்தான் அள்ளிக்கொடுக்கிறது நம் தமிழ்மொழியும் இலக்கியங்களும். நுணுக்கமான செய்திகளினைக் கூடவிட்டுவிடாமல் பலரின் ஆய்வாற்றலானது பல எல்லைக் கடந்து சென்றிருக்கிறது. அதில் சின்னஞ்சிறு ஆய்வுபாதையாக எடுத்துக்கொண்ட தலைப்புதான் சிலம்பில் அறியப்படாத மலர் வகைகள். குறிஞ்சிப்பாட்டில் காணப்பட்ட 99 வகைமலர்கள் சிலப்பதிகாரக் காப்பியத்தில் இடம்பெற்றுள்ளதா என்பதை ஒப்பிட்டு ஆய்வதாக அமைந்துள்ளது இக்கட்டுரை. 99 மலர்கள் மட்டும் இடம்பெற்றுள்ளதா? அல்லது மேலும் அறியப்படாத மலர்கள் இருக்கின்றனவா? என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம் (Subramanian, 2006).

## சங்க இலக்கியத்தின் பன்முகங்கள்

சங்க இலக்கியக் காலம் நமக்கு அளித்திருக்கும் கொடை அலப்பறியதாகவுள்ளது என்பதில் சிறிதளவு கூடமாற்றுக்கருத்துகிடையாது. இலக்கண இலக்கியச் செழுமையை விரித்துரைக்கும் வண்ணமாக விளங்குகிறது இப்புறநானூற்றுப் பாடலடி,

"யாதும் ஊரேயாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தரவாரா..." (புறம்.-192)

கணியன் பூங்குன்றனாரின் பாடலடிகள் அனைவரின் உள்ள ஊற்றினைப் பெருக்கெடுக்கச்செய்கிறது. அத்தோடு இலக்கியத்தினையும் இலக்கணத்தையும் விளக்கும் வகையில், அகத்தியரின் வாய்மொழிக்கேற்ப இலக்கியமற்றும் இலக்கணம் பற்றிய தெளிவினை நமக்கு எடுத்துரைத்தார். அத்தோடு இலக்கியமானது நம்முள் ஆழமாக ஊற்றெடுகின்ற ஊற்றாக விளங்குவதை குறிப்பிடும் வகையில்,

"தொட்டத் தூறும் மனக்கேணி மாந்தர்க்கு

கற்றணைத் தூறும் அறிவு" (குறள் 396)

கேணியைத் தோண்டிய அளவில் நீர் பெருக்கெடுப்பது போலமக்கள் கற்றக் கல்வியானது மேலும் மேலும் பெருக்கெடுக்கும் என்ற வகையில் இலக்கியமானது நம்மூடே இணைந்திருக்கிறது. இம்மேன்மையினைப் பெற்ற இலக்கியத்தில் இரண்டு களத்தினைக் கொண்டு ஒப்பிட்டுநோக்கும் வகையில் இவ்ஆய்வானது அமைக்கப்பட்டுள்ளது.

## குறிஞ்சிப்பாட்டில் உள்ள மலர்கள்

சங்க இலக்கியங்களில் எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டு என்ற மேற்கணக்கு நூல்களாக பகுத்துள்ளனர். இவற்றுள்,பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றானது குறிஞ்சிப்பாட்டு. கபிலர் இயற்றிய பாடலாக அமைந்துள்ளது. இவற்றுள், 261 பாடலடிகள் இடம்பெற்றுள்ளன. அகப்பொருளினைமையாகவைத்தே இப்பாடல்கள் அமைந்துள்ளதாகவும், ஆரிய அரசன் பிரகத்தனுக்கு தமிழின் பெருமையை விளக்கும்வகையில் பாடியதாகவும் எடுத்துரைக்கிறது. இக்குறிஞ்சிப்பாடல்களில் இயற்கையின் எழில் மிகுந்தகாட்சிகளையும் தலைவன் தலைவியின் அகவுணர்வுகளை அழகுற எடுத்துரைப்பதாக கபிலர் பாடல்களை அமைத்துள்ளார். அத்தோடு 99 வகையில் மலர்களை தலைவியும் தோழியும் பறித்து நீராடிவிட்டு மாலையாகக் கோர்த்து தலையில் சு+டிமகிழ்ந்து விளையாடியதாக கபிலர் எடுத்துரைத்துள்ளார்.

" …….. ……… ………. ….. வள் இதழ்

ஒண் செங்காந்தள், ஆம்பல், அனிச்சம்,

தண் கயக் குவளை, குறிஞ்சி, வெட்சி,

செங் கோடுவேரி, தேமா, மணிச்சிகை,

உரிது நாறு அவிழ் தொத்து உந்தூழ்" (குறிஞ்சி பாட்சி1-4)

செங்காந்தள், ஆம்பல், அனிச்சம், செங்கழுநீர், குறிஞ்சிப்பூ, வெட்சி, செங்கோடுவேரி, தேமாம்பூ, செம்மணிப்பூ, பெருமூங்கிற்பூ, கூவிளம்பூ, எறுழம்பூ, மராமரப்பூ, கூவிரம், வடவனப்பூ, வெட்பாலைப்பூ, பைஞ்சாய்க் கோரைப்பூ, வெண்காக்கணம்பூ, கருவிளம்பூ, பயனிப்பூ, வானிப்பூ, குரவம்பூ போன்ற 99 வகையானமலர்கள் இடம்பெற்றுள்ளன.

## சிலப்பதிகாரமும் காதைகளும்

இரட்டைக் காப்பியங்களில் முதலாவதாக கருதப்படுவது சிலப்பதிகாரமேயாம். இளங்கோவடிகளின் கவிவண்ணதில் உருபெற்ற கவிநயம் பொருந்திய காப்பியமாக நம் அனைவர் முன்னிலையிலும் வளம் வந்துகொண்டு இருக்கிறது. இவற்றில் 30 காதைகள் இடம்பெருகின்றன. அவற்றினை மூன்றுகாண்டங்களாக புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் என்று வகுத்துள்ளார் கவிஞர். அத்தோடு இயற்கைநயத்தை அக உணர்வோடு இணைத்து பாடல்களை அமைத்துள்ளார். அவ்வாறாக இயற்கையினைக் குறிப்பிடும் போதுமலர்கள் பற்றியசெய்திகளையும் உவமைப்பொருளாகவும் இயற்கையின் அழகினை வெளிப்படுத்தும் போதும் பூக்களைக் குறிப்பிட்டுள்ளார். அத்தோடுகோவலன் கண்ணகியினை விட்டுப் பிரிந்தநிலையிலும், மாதவியினைவிட்டுப் பிரிந்தநிலையிலும் பலவகையான மலர்களின் பெயர்களைக் கொண்டு உவமைப்படுத்தி கவிஞர் கூறியுள்ளார்.

## சிலப்பதிகாரத்தில் மலர்கள்

குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள 99 வகைமலர்களில் சிலப்பதிகாரத்தில் 62 மலர்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. பல பாடல்களில் இயற்கையின் வருணனைகளைக் குறிப்பிடுவதாகவும் அரசர்களின் பெருமைகளைக் குறிப்பிடுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. "அடும்பு, அதிரல், அவரை, ஆம்பல், ஆரம், இலவம், கண்ணி, கரந்தை, கருவிளை, காஞ்சி, காந்தள், காயா, காழ்வை, குடசம், குரவம், குருக்கத்தி, குவளை, குறிஞ்சி, கைதை, கோங்கம், கோடல், சண்பகம், சிந்து, செங்கோடு, செம்மல், செருத்தி, ஞாழல், தளவம், தாமரை, தாழைமலர், திலகம், தும்பை, துழாஅய், தோன்றி, நந்தி, நரந்தம், நறவம், புன்னாகமலர், நெய்தல் (நீள் நறுநெய்தல்), பகன்றை, பசும்பிடி, பாதிரி, பாரம், பாலை, பிடவம், பிண்டி, பித்திகம், பீரம், புன்னை, பூளை, மராஅம், மருதம், மா, முல்லை, வகுளம், வஞ்சி, வள்ளி, வாகை, வாரம், வாழை, வெட்சி, வேங்கை" ஆக 62 குறிஞ்சிப்பாட்டுமலர்கள் சிலம்பில் இடம்பெற்றுள்ளன. "வண்டுகள் உண்ணும் நிலையில் கிடந்த நல்லமணம் பொருந்திய மலர்களையுடைய படுக்கையில் கண்ணகியும் கோவலனும் இன்பம் துய்த்தனர்" என்பதில் எண்ணற்ற மலர்களின் பங்களிப்பும் இடம்பெற்றுள்ளன.

"இதழ் ஒடியாத முழுவதும் விரிந்த குவளைப்பூ

அரும்புகள் விரிந்த வண்டுகள் ஒலிக்கின்ற தாமரைப் பூ

வயல்களில் மலர்ந்துள்ள கழுநீர்ப்பூக்கள்

அயலிலுள்ள தாழை மடலில் விரிந்த வெண்நிறப்பூக்கள்" (சிலம்பு. மனை. 14-17)

சிலப்பதிகார புகார்க்காண்டத்தில் 35 மலர்களும் மதுரைக்காண்டத்தில் 48 மலர்களும் வஞ்காண்டத்தில் 25 மலர்களும் இடம் பெற்றுள்ளன (Kathir Murugu, 2012).

"ஆரம், கண்ணி, காழ்வை, குவளை, தாமரை, தாழைமலர், திலகம், தோன்றி, நெய்தல் (நீள் நறு நெய்தல்), பாலை, புன்னை, மா, வேங்கை" ஆகிய 13 பூக்களும் மூன்று காண்டத்திலும் இடம்பெற்றுள்ளன.

குறிஞ்சிப்பாட்டில் உள்ள 99 வகை மலர்களில் சிலம்பில் 37 மலர்கள் இடம்பெறாதது இவ் ஆய்வின் மூலம் அறியுமுடிகிறது, அட்டவணை 1 மற்றும் அட்டவணை 2-ல் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.** குறிஞ்சிப்பாட்டின் மலர்களின் பெயர்கள்

| வ.எண் | குறிஞ்சிப்பாட்டின் மலர்களின் பெயர்கள் | பாடல் அடியும் எண்ணிக்கையும் | புகார்க் காண்டம் (1-10) | மதுரைக் காண்டம் (11-23) | வஞ்சிக் காண்டம் (24-30) |
|---|---|---|---|---|---|
| 1. | அடும்பு | 85-1 | 7-67 | - | - |
| 2. | அதிரல் | 75-1 | 13-156 | - | - |
| 3. | அவரை | 87-3 | 1-40,41 | 16-183 | - |
| 4. | ஆம்பல் | 62-7 | 2-14, 4-73, 7-36, 7-134, 17-87 | 22-68,69 | - |
| 5. | ஆரம் | 93-14 | 1-12, 4-41, 42 | 11-24,25, 11-49, 16-193, 17-120, 121, 22-125 | 25-18,19, 25-21 29-184 |
| 6. | இலவம் | 86-2 | 5-214 | 12-80 | - |
| 7. | கண்ணி | 72-11 | 1-12, 8-83, 122, 10-76 | 11-72,20-22 | 24-91, 27-126, 28-9,134, 29-75 |
| 8. | கரந்தை | 76-2 | - | 12-133,166 | - |
| 9. | கருவிளை | 68-2 | - | 22-40,89 | - |
| 10. | காஞ்சி | 84-4 | - | 22-77,78 | 26-191,29-178 |
| 11. | காந்தள் | 62-3 | 6-98, 7-10,204 | - | - |
| 12. | காயா | 70-1 | | 12-119 | - |
| 13. | காழ்வை | 93-12 | 2-70, 4-41, 6-87,88, 8-95 | 11-186, 13-115, 14-173, 22-91, 125 | 25-18,27-15 |
| 14. | குடசம் | 67-1 | - | 14-87 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15. | குரவம் | 69-3 | - | 11-207, 12-84, 13-151 | - |
| 16. | குருக்கத்தி | 92-1 | 5-190 | - | - |
| 17. | குவளை | 63-20 | 2-14,15, 4-40, 64, 76, 5-192, 215, 230, 231, 7-43, 96, 8-75, 10-32, 86 | 13-184, 14-76,77, 23-2 | 27-234,235 |
| 18. | குறிஞ்சி | 63-7 | - | 11-64, 14-89, | 24-18, 27-224, 28-35, 224, 30-46 |
| 19. | கைதை | 83-2 | 6-150,7-187 | - | - |
| 20. | கோங்கம் | 72-5 | - | 11-207, 12-84, 13-151 | 25-17, 28-93 |
| 21. | கோடல் | 83-3 | 8-62,63 | - | 28-93 |
| 22. | சண்பகம் | 75-3 | 8-45,10-69 | 22-40 | - |
| 23. | சிந்து | 89-1 | - | 16-138 (சிந்துவாரம்) | - |
| 24. | செங்கோடு | 64-1 | - | - | 24-27 |
| 25. | செம்மல் | 82-5 | 7-172,10-72,183 | 15-90,91 | - |
| 26. | செருத்தி | 75-1 | - | 13-153 | - |
| 27. | ஞாழல் | 81-1 | 7-50 | - | - |
| 28. | தளவம் | 80-1 | - | 13-115 | - |
| 29. | தாமரை | 80-19 | 2-15,16, 4-39,74, 6-115,148, 10-113 | 11-48, 134, 201, 12-107, 14-3, 4, 22-19, 23-7 | 26-29, 27-194, 27-236, 28-110 |
| 30. | தாழைமலர் | 80-6 | 2-17, 6-166, 6-175, 8-49 | 22-68 | 27-237 |
| 31. | திலகம் | 74-4 | 4-54,8-74 | 13-152 | 25-18 |
| 32. | தும்பை | 90-9 | - | - | 26-70, 26-219, 220, 27-45, 112, 198, 221, 248, 28-84 |
| 33. | துழாஅய் | 90-2 | - | 17-66,138 | - |
| 34. | தோன்றி | 90-44 | 1-43, 44, 81, 82, 4-23, 24, 5-5, 6, 6-162,163, 8-96,97, 10-129,130 | 11-111,112,121, 122,145,146,173,174 13-18,19,129,130 15-180,181,21-49,50 22-102,103,23-16,17 | 27-48,49 28-81,82 30-89,90,93,94, 172,173 |
| 35. | நந்தி | 91-1 | - | 22-19 | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | நரந்தம் | 94-1 | - | 12-75 | - |
| 37. | நறவம் | 91-1 | 6-117 | - | - |
| 38. | புன்னாக மலர் | 91-4 | - | 12-75,<br>13-58,13-152 | 25-18 |
| 39. | நெய்தல் (நீள் நறு நெய்தல்) | 79-4 | 6-150,9-58 | 22-69,14-77 | 28-115 |
| 40. | பகன்றை | 88-1 | - | 13-157,158 | - |
| 41. | பசும்பிடி | 70-11 | 2-57,3-165,<br>5-152,154 | 14-185,216<br>16-25,29,118,<br>20-46,22-62 | - |
| 42. | பாதிரி | 74-1 | - | 12-83 | - |
| 43. | பாரம் | 92-2 | 7-83,84 | - | 30-180 |
| 44. | பாலை | 77-5 | 3-71,7-207,208 | 11-66 | 26-31 |
| 45. | பிடவம் | 78-1 | - | 13-158 | - |
| 46. | பிண்டி | 88-4 | 3-22,10-21 | 11-3,15-152 | - |
| 47. | பித்திகம் | 89-1 | 8-55 | - | - |
| 48. | பீரம் | 92-1 | 7-169 | - | - |
| 49. | புன்னை | 93-8 | 6-168,<br>7-46,97,133,165 | 12-83 | 27-243,244 |
| 50. | பூளை | 72-2 | 9-43 | 22-69 | - |
| 51. | மராஅம் | 85-1 | - | 11-75 | - |
| 52. | மருதம் | 73-8 | 6-149,8-39,40,41 | 22-69,70,13-152,153 | - |
| 53. | மா | 64-83 | 0-5,43,1-44,54,<br>2-53,3-170,4-40,<br>5-99,163,174,233,<br>6-11,49,174,<br>7-222,234,<br>8-8,16,118,10-216 | 11-31,34,58,150,188,<br>12-49,50,103,128,<br>13-49,<br>15-6,13,14,22,25,<br>56,93,98,101,112,<br>113,16-15,69,75,<br>19-28,31,<br>21-50,59,150,158,<br>23-14,22,177,196 | 24-25,50,64,<br>104,113,74,77,<br>110,129,180,<br>26-189,<br>26-200,232,<br>27-68,84,91,<br>129,180,<br>28-25,<br>28-47,151,218,<br>29-32,<br>29-49,57,63,<br>30-127,142,202 |
| 54. | முல்லை | 78-14 | 4-5,27,5-191,214,<br>9-1,2 | 11-64,13-120,121,<br>165,14-76,<br>17-38,76,90, | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 55. | வகுளம் | 70-1 | - | 13-151 | - |
| 56. | வஞ்சி | 89-26 | - | 17-128,129,21-11 | 25-9,34,148,<br>149,174,179,180,<br>26-46,50,51,79,99,<br>27-113,149,249,<br>28-4,196,<br>29-32,110,188,<br>30-127,173,217, |
| 57. | வள்ளி | 79-1 | - | - | 24-3 |
| 58. | வாகை | 67-7 | - | 23-72 | 26-70,<br>27-36,43,198,<br>221,253 |
| 59. | வாரம் | 89-5 | 3-21,136,153,6-19 | 14-155 | - |
| 60. | வாழை | 79-5 | - | 16-26,42,11-83,193 | 25-47 |
| 61. | வெட்சி | 63-4 | - | 12-121,122,167,22-68 | - |
| 62. | வேங்கை | 95-13 | 0-4,1-67,68 | 12-79,23-191 | 24-3,14,120,<br>121,25-17,57,<br>28-220,221,<br>29-144,29-145 |

**அட்டவணை 2.** சிலம்பில் இடம்பெறா குறிஞ்சிப்பாட்டு மலர்கள்

| வ.எண் | சிலம்பில் இல்லா குறிஞ்சி மலர்கள் | பாடல் அடியின் எண். |
|---|---|---|
| 1. | அனிச்சம் | 62 |
| 2. | ஆத்தி | 87 |
| 3. | ஆவிரை | 71 |
| 4. | இருள்நாறி | 94 |
| 5. | ஈங்கை | 86 |
| 6. | உந்தூழ் | 65 |
| 7. | மௌவல் | 81 |
| 8. | முல்லை (கல் இவர் முல்லை) | 77 |
| 9. | மரோடம் | 78 |
| 10. | மணிச்சிகை | 64 |
| 11. | போங்கம் | 74 |
| 12. | பாங்கர் | 85 |
| 13. | பலாசம் | 88 |
| 14. | புயினி | 69 |
| 15. | நெய்தல் (மணிக்குலைக் கள் கமழ் நெய்தல்) | 80 |

| | | |
|---|---|---|
| 16. | நாகம் மலர் | 94 |
| 17. | தில்லை | 77 |
| 18. | தணக்கம் | 85 |
| 19. | சேடல் | 82 |
| 20. | செருவிளை | 68 |
| 21. | சூரல் | 71 |
| 22. | சுள்ளி | 66 |
| 23. | கொன்றை | 86 |
| 24. | கொகுடி | 81 |
| 25. | எருவை | 68 |
| 26. | எறுழம் | 66 |
| 27. | கூவிளம் | 65 |
| 28. | கூவிரம் | 66 |
| 29. | குளவி | 76 |
| 30. | குருந்தம் | 95 |
| 31. | குரலி | 82 |
| 32. | குருகிலை | 73 |
| 33. | வடவனம் | 67 |
| 34. | வழை மரம் | 83 |
| 35. | வானி மலர் | 69 |
| 36. | வேரல் | 71 |
| 37. | வேரிமலர் | 64 |

"அனிச்சம், ஆத்தி, ஆவிரை, இருள்நாறி, ஈங்கை, உந்தூழ், மௌவல், முல்லை (கல் இவர் முல்லை), மரோடம், மணிச்சிகை, போங்கம், பாங்கர், பலாசம், பயினி, நெய்தல் (மணிக்குலைக் கள் கமழ் நெய்தல்), நாகம் மலர், தில்லை, தணக்கம், சேடல், செருவிளை, சூரல், சுள்ளி, கொன்றை, கொகுடி, எருவை, எறுழம், கூவிளம், கூவிரம், குளவி, குருந்தம், குரலி, குருகிலை, வடவனம், வழை மரம், வானி மலர், வேரல், வேரிமலர் என்ற 37 குறிஞ்சிப்பாட்டு மலர்களும் சிலம்பு பாடல்களில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (Srichandran, 2013).

## சிலம்பில் காணப்படும் புதிய மலர்கள்

குறிஞ்சிப்பாட்டில் உள்ள 99 வகை மலர்களில் இடம்பெறாத புதிய மலர்கள் சிலம்பில் இடம்பெற்றுள்ளன. சிலம்பில் காணப்படும் புதிய மலர்கள் மொத்தம் 27 மலர்கள் என்பது ஆய்வின் மூலம் அறியமுடிகிறது 3-ல் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 3. 99 வகைகளில் சொல்லப்படாது சிலம்பில் காணப்படும் புதிய மலர்கள்

| வ.எண் | புதிய மலர்கள் | புகார்க் காண்டம் (1-10) | மதுரைக்காண்டம் (11-23) | வஞ்சிக்காண்டம் (24-30) |
|---|---|---|---|---|
| 1. | வேப்பம் பூ (1) | - | சிறப்பு கருதி "வேப்பம் பூ மாலை அணியும் பாண்டியன்" என்ற குறிப்பு வந்துள்ளது. | - |
| 2. | சேதாம்பல் (1) | 2-14 (மனையறம்படுத்த காதை) நச்சினார்க்கினியர் உரையினை மேற்கோலாகக் கொண்டு அறிந்தது. | - | - |
| 3. | மாதவிப்பூ (2) | 2-18,3-170 | - | - |
| 4. | செங்கழுநீர்ப்பூ (6) | 2-14,34,4-40, | - | - |
| 5. | குமிழம் பூ (4) | 5-236,13-31,119 | - | - |
| 6. | விடு பூ (1) | 4-68,69, | - | - |
| 7. | தொடைப் பூ (1) | 5-205,8-75 | - | - |
| 8. | கட்டுப்பூ (1) | 5-14 | - | - |
| 9. | மல்லிகைப் பூ (1) | 5-14 | - | - |
| 10. | இருவாட்சி (2) | 5-14 | - | - |
| 11. | கோட்டுமலர் (4) | 5-191 | 15-98 | 26-232 |
| 12. | அசோகப் பூ (1) | 5-192,193 | - | - |
| 13. | நீல மலர் (2) | 7-1,10-35 | - | - |
| 14. | வட்டப்பூ (1) | 10-21 | - | - |
| 15. | குருகு (தாழையின் மறுபெயர்) (1) | காதை- 7 | - | 27-237 |
| 16. | கூதாளம் (2) | பாடல்-5 | 22-40,41 | - |
| 17. | பாடலம் (1) | அடிகள் (3,4), | 13-154 | - |
| 18. | மயிலை (2) | பாடல்-21அடி (2) | - | - |
| 19. | முசுண்டை (2) | 6-97,98 | 13-155,156 | - |
| 20. | வெதிரம் (1) | - | 13-157 | - |
| 21. | அல்லி (1) | - | - | - |
| 22. | கடப்ப மலர் (1) | - | - | 24-20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 23. | துவளம்-<br>துளசிப்பூ (1) | 5-191,192 | **காதை** -12<br>**பாடல்** - 11<br>**அடிகள்** 2,3 | - |
| 24. | கடம்பு (1) | - | **காதை** -12<br>**பாடல்** - 4<br>**அடிகள்** 1,2 | - |
| 25. | குரவல் மலர் (1) | - | 13-98 | - |
| 26. | குங்குமப் பூ (2) | 6-48 | 13-115,116 | - |
| 27. | மஞ்சாடிப்பூ (2) | - | 13-151,160 | - |

"வேப்பம்பூ, சேதாம்பல்பூ, மாதவிப்பூ, செங்கழுநீர்ப்பூ, குமிழிப்பூ, விடுபூ, தொடைப்பூ, கட்டுப்பூ, மல்லிகைப்பூ, இருவாட்சிப்பூ, கோட்டுப்பூ, அசோகப்பூ, நீலமலர், வட்டப்பூ, குருகுப்பூ, கூதாளம், பாடலம், மயிலை, முசுண்டை, வெதிரம், அல்லி, கடப்பமலர், துளவம், கடம்பு, குரவல்மலர், குங்குமப்பூ, மஞ்சாடிப்பூ"

"வேப்பம் பூ மாலையை அணிந்த பாண்டியன்"

என்றும் அரசரை சிறப்பு செய்யும் வகையில் மலர்களை குறிப்பிட்டுள்ளார் கவிஞர்.

"இல்வளர் முல்லை மல்லிகை மயிலை" - இந்திரவிழவு ஊர் எடுத்த காதை (5-191)

"சித்திரப் படத்துள் புக்குச் செழும் கோட்டின் மலர் புனைந்து"- கானல் வரி (7-1)

"கோதை மாதவி, சண்பகப் பொதும்பர்"- மனைஅறம்படுத்த காதை (2-18)

"கொன்றையும் துளவமும் குழுமத் தொடுத்த துன்றுமலர்"- வேட்டுவ வரி (11-2,3)

"பொலம்பூம் பிண்டி நலம் கிளர் கொழுநிழல்"- நாடுகாண் காதை (10-21)

"பூவும் புகையும் மேவிய விரையும்" - இந்திரவிழவு ஊர் எடுத்த காதை (5-14)

இப்பாடலடியில் பூவும் என்பதில் மூன்று வகைப் பூக்கள் இடம்பெற்றுள்ளதாக உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். "விடுபூ, தொடைப்பூ, கட்டுப்பூ" என்ற மூன்று பூக்களும் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறாத புதிய மலர்களாக அமைந்துள்ளன (Kayalvizhy, 2020).

27 வகை மலர்கள் 99 வகை மலர்களுள் இடம்பெறாதவை என்ற செய்தியானது சிலம்பின் சிறப்பினை எடுத்துக்கிறது. அதோடு குறிஞ்சிப்பாட்டில் உள்ள 99 வகை மலர்களோடு இணைத்து மொத்தமாக 126 வகை மலர்கள், சிலம்பு மற்றும் குறிஞ்சிப்பாட்டின் மூலம் நமக்கு கிடைத்தவையாகிறது. குறிஞ்சிப்பாட்டில் கூறியுள்ள 99 மலர்களில் சிலம்பில் 62 மலர்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளது என்பது கபிலரின் சிறப்பினை மேம்படுத்துவதாக அமைந்துள்ளது (Srichandran, 2013).

## முடிவுரை

இலக்கியத்தின் தேடலானது அகண்டபாதையாகவும் நம்மை ஆய்வுப்பாதைக்கு கொண்டுசெலுத்துவதாகவும் அமைந்துள்ளது. குறிஞ்சிப்பாட்டில் நாம் கண்ட 99 வகை

மலர்களும் இன்றளவும் இருக்கின்றவா என்பது ஐயமே. ஆய்வியல் நோக்கோடு பார்க்கும் போது சிலம்பில் 37 மலர்கள் இடம்பெறவில்லை என்பதும் புதிதாக 27 மலர்கள் இடம்பெற்றுள்ளன என்பதும் ஆய்வின் முடிவாக அறியமுடிகிறது. அத்தோடு இடம்பெற்ற மலர்களுள் புகார்க்காண்டத்தில் 35 மலர்களும் மதுரைக்காண்டத்தில் 48 மலர்களும் வஞ்சிக்காண்டத்தில் 25 மலர்களும் இடம்பெற்றதாக அறியமுடிகிறது. அதனைத் தொடர்ந்து சிலம்பில் புதியதாக காணப்படும் மலர்களுள் புகார்க்காண்டத்தில் 15 மலர்களும் மதுரைக்காண்டத்தில் 11 மலர்களும் வஞ்சிக்காண்டத்தில் 03 மலர்களும் புதிய மலர்களாக காணப்படுகின்றன. இவற்றில் மூன்றுகாண்டங்களிலுமே இடம்பெற்ற புதிய மலரான “கோட்டுமலர்” சிறப்புவாய்ந்தவையாக கருதப்படுகிறது. அறிவியலுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது இன்னும் பல மலர்களின் வகைகள் நம் இலக்கியங்களின் வாயிலாக அறிமுகப்படுத்தலாம் என்ற செருக்கை ஏற்படுத்தும் வண்ணம் நம் இலக்கியமானது செழித்து காணப்படுகிறது. மேலாய்வுக்களமாக காப்பியங்கள், எட்டுத்தொகை நூல்கள் மற்றும் பத்துப்பாட்டு நூல்களில் காணப்படும் மலர்களைப் பற்றியும் அவற்றுள்கபிலர் கூறிய 99 வகை மலர்கள் மட்டும் உள்ளதா, அல்லது சிலம்பில் புதியதாக காணப்பட்ட 27 மலர்கள் போல் புதிய மலர்கள் உள்ளதா, வேறு வகையான மலர்களும் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளனவா, என்பதை ஆய்வதே சாலச்சிறந்ததாக அமையும்.

## References

Kathir Murugu, (2012) Pathupaattu Kurinjipaattu Mullaipaattu Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.

Kayalvizhy, M., (2020) Trees in Pathuppattu, Indian Journal of Tamil, vol. 1, no. 1, pp. 27-39, doi:10.34256/ijot2013

Srichandran, J., (2013) Silapathikaram - Source and text, First Edition, Tamil Nilayam, Chennai, India

Subramanian, S.V., (2006) Silappatikaram, Manivasagar Pathippagam, Chennai, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License